DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Deposition of Witness

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் - சசிக்குமார் **PW-7** வயது

த/க பெயர் தொழில்

கிராமம் தாலூக்கா

மாவட்டம்

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் தற்போது நாமக்கல் மாவட்டம், கோடாங்கிபட்டியில் வசித்து வருகிறேன். தற்போது மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவம் நடந்தபோது நாமக்கல் பேருந்து நிலையம் அருகில் தாஜ் நெட் வோர்ல்டு என்ற பெயரில் இன்டர்நெட் பிரவுசிங் சென்டர் நடத்தி வந்தேன். கடந்த 11.08.2012ம் தேதி இரவு 9 மணியளவில் 3 நபர்கள் எனது பிரவுசிங் சென்டருக்கு வந்தார்கள். நான் இரவு 9.20 மணிக்கு பிரவுசிங் சென்டரை அடைத்து விடுவேன் என்று சொன்னேன். அவர்கள் மெயில் மட்டும் செக் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அவர்களிடம் எந்த ஊர் என்று கேட்டேன். நாமக்கல் சந்தை பேட்டை புதூரைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் பெயர் கேட்டபோது ஒருவர் செல்வராஜ் என்று சொன்னார். அவரது போன் எண்ணை பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு 5ம் எண் கொண்ட கம்பியூட்டரை அவருக்கு ஒதுக்கினேன். மேலும் அவர் கல்லூரி விரிவுரையாளராக இருப்பதாக என்னிடம் சொன்னார்.

2) சிறிது நேரம் கம்பியூட்டரில் வேலை செய்த பிறகு, அலுவலக வேலை என்பதால் சிறிது நேரம் பணி இருக்கும் என்றும், பதிவிறக்கம் செய்ய வேண்டும் என்றும் என்னிடம் சொன்னார்கள். சிறிது நேரம் கழித்து மேலும் இரண்டு நபர்கள் அங்கு வந்தனர். அவர்களை விசாரித்தபோது அவர்கள் செல்வராஜின் நண்பர்கள் என்று சொன்னார்கள். பின்னிட்டு அவர்கள் பெயர் செந்தில், சுதாகர் என்று டி.எஸ்.பியின் விசாரணையின்போது தெரிந்து கொண்டேன். செல்வராஜுக்கு பின்னால் அவர்கள் உட்கார்ந்து கொண்டனர். செல்வராஜுடன் வந்த ஒரு பெண் தனியாக ஒரு கேபினில் உட்கார்ந்து கொண்டார். செல்வராஜுடன் வந்த ஒருவர் பெயர் வரதராஜ்.

3) பின்னிட்டு 5 ம் நம்பர் சிஸ்டத்திலிருந்து நேரடியாக பிரிண்ட் எடுக்க முடியுமா என்று கேட்டனர். நான் எடுக்க முடியும் என்று சொன்னேன். அவர்கள் 5 ம் எண் சிஸ்டத்திலிருந்து பிரிண்ட் கொடுத்தார்கள். அப்போது வரதராஜ் என்பவர் பிரிண்டர் அருகில் நின்று கொண்டிருந்தார். பிரிண்ட் வர வர அவர் பின்னால் உட்கார்ந்திருந்த செந்தில் மற்றும் சுதாகர் ஆகியோரிடம் கொடுத்துக் கொண்டிருந்தார். நான் சந்தேகப்பட்டு என்ன பிரிண்ட் என்று கேட்டபோது அவர் அலுவலக மற்றும் டீச்சிங் சம்பந்தப்பட்டது என்று சொன்னார். நான் ஒரு பிரிண்ட்டை எடுத்துப் பார்த்தேன். அது கையால் எழுதப்பட்ட வினாவிடை போல் இருந்தது. நான் அதன் பிறகு எதையும் கேட்கவில்லை. அவர்கள் பிரிண்ட் எடுத்துக் கொண்டிருந்தனர். இரவு சுமார் 12 மணிக்கு அவர்கள் வேலை முடிந்துவிட்டதாகவும், டைம் குளோஸ் செய்யுமாறு சொன்னார்கள். நான் அவர்களிடம் சிஸ்டத்தை அணைத்து விடுங்கள் என்று சொன்னேன்.

4) கேபினுக்குள்ளேயே அவர்கள், பதிவிறக்கம் செய்யப்பட்ட தாள்களை எண்ணிப் பார்த்துவிட்டு, என்னிடம் வந்து எவ்வளவு கட்டணம் என்று கேட்டனர் .நான் அவர்களிடம் எத்தனை பக்கம் பிரிண்ட் எடுத்தீர்கள் என்று கேட்டேன். அவர்கள் 740 பக்கம் என்று சொன்னார்கள். ஒரு பக்கம் பிரிண்ட் எடுப்பதற்கு 2 ரூபாயும், ஒரு மணிநேரம் பிரவுஸ் செய்வதற்கு ரூ.20 வீதம் 3 மணி நேரம் பிரவுஸ் செய்தது ஆக மொத்தக் கட்டணமாக ரூ.1540/-யை கட்டணம் என்று சொன்னேன். மேற்படி வரதராஜ்

என்னிடம் ரூ.1500/- கொடுத்தார். மீதம் ரூ.40/-யை கேட்டேன். அதை குறைத்துக் கொள்ளச் சொன்னார்கள். நான் சரி என்று சொல்லி விட்டேன். அதன்பிறகு அவர்கள் தங்களுக்குள் கலந்து ஆலோசித்துக் கொண்டிருந்தனர். எடுத்த பிரிண்டுகளை அடுக்கிக் கொண்டிருந்தனர். அதிகாலை 2.30 லிருந்து 3 மணிக்குள் செல்வராஜ், வரதராஜ், சுதாகர், செந்தில் மற்றும் ஒரு பெண் ஆகியோர் தாங்கள் எடுத்த பிரிண்டுகளை கையில் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டனர். நான் சிஸ்டத்தை அணைத்து விட்டு ஷட்டரைப் பூட்டி விட்டு வீட்டிற்குச் சென்றேன். 13.08.2012 ம் தேதி நாமக்கல் சார்பு ஆய்வாளர் ஒருவர் என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக நாமக்கல் நகர காவல் நிலையத்திற்கு என்னை வரச்சொல்லிச் சொன்னார். நான் உடனடியாக பேருந்து நிலையம் அருகில் சென்றேன். சார்பு ஆய்வாளர் என்னை நகர காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு டி.எஸ்.பியும், இரண்டு நபர்களும் இருந்தனர். என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். என்னிடம் பிரவுசிங் சென்டர் சாவியை டி.எஸ்.பி வாங்கிக் கொண்டார். என்னை எனது கம்பியூட்டர் சென்டருக்கு அழைத்துச் சென்றனர். டி.எஸ்.பி என்னை விசாரித்தார்.

5) 12.08.2012 ம் தேதி TNPSC Group-2 தேர்வின் வினாத்தாள் கசிந்து விட்டதாகவும், அது தொடர்பாக விசாரிப்பதற்காகத்தான் என்னை வரச் சொன்னதாக என்னிடம் சொன்னார். நான் எனக்கும், அதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னேன். நான் வாடிக்கையாளர் வரும்போது அவரின் பெயர், முகவரி மற்றும் போன் நம்பரை பதிவு செய்து கொண்டு, சிஸ்டத்தை ஒதுக்குவேன் என்றும், அவர்கள் எவ்வளவு நேரம் பயன்படுத்துகிறார்களோ அதற்கு தகுந்த கட்டணத்தை பெற்றுக் கொள்வேன் என்றும் அவரிடம் சொன்னேன். 11.08.2012 ம் தேதி இரவு 9 மணிக்கு செல்வராஜ் என்பவர் எனது பிரவுசிங் சென்டருக்கு வந்ததாகவும், 740 பக்கங்கள் பிரிண்ட் அவுட் எடுத்தாகவும் அவரது பெயர் மற்றும் தொலைபேசி எண்ணை, நான் பராமரித்து வரும் நோட்டில் எழுதி வைத்திருப்பதாகவும் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் நோட்டு தான், நான் எனது அலுவலகத்தில் பராமரித்து வந்த விபரக்குறிப்பேடு ஆகும். அது ஏற்கனவே அ.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 11.08.2012 ம் தேதியிட்ட 21 வது பக்கத்தில் செல்வராஜ் என்பவரது பெயர் மற்றும் அவரது தொலைபேசி

எண் ஆனது 20 வது எண்ணாக எழுதப்பட்டுள்ளது. அது என்னால் கைப்பட எழுதப்பட்டதாகும், மேற்படி செல்வராஜ் என்பவர் பெயர் எழுதப்பட்ட பக்கம் **அ.சா.ஆ.32** ஆகும். அதில் உள்ள தொகை என்னால் எழுதப்பட்டதாகும். அதில் 790 பக்ஙகள் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் 740 பக்கங்கள் தான் பிரிண்ட் அவுட் எடுத்தனர். அந்த கூட்டுத் தொகையை நான்தான் எழுதினேன். அவரது மொபைல் நம்பரை டி.எஸ்.பி குறித்துக் கொண்டார். டி.எஸ்.பியிடம் மேற்படி செல்வராஜ் சிஸ்டம் எண்.5 ல் வேலை செய்ததாக நான் சொன்னேன். டி.எஸ்.பியுடன் வந்த இருவர் 5 ம் எண் சிஸ்டத்தை ஆன் செய்து பார்த்தனர்.

6) மேற்படி செல்வராஜ், 11 ம்தேதி இரவு இமெயிலிருந்து டவுன்லோடு செய்யப்பட்டதை, சிஸ்டத்தில் Save செய்து அதை அழிக்காமல் விட்டுவிட்டார். டி.எஸ்.பி என்னிடம், மேற்படி செல்வராஜ அடையாளம் காட்ட முடியுமா என்று கேட்டார். நான் காட்டுவேன் என்று சொன்னேன். பின்னிட்டு பிரவுசிங் சென்டரை மூடிவிட்டு நாமக்கல் பேருந்து நிலையம் அருகில் இருந்த ஓம் சக்தி லட்ஜுக்கு என்னை அழைத்துச் சென்றனர். அங்கு பதிவேட்டைப் பார்த்தார்கள். அங்கு அறை எண்.203 வரதராஜ் என்பவர் பெயரில் பதிவு ஆகியிருந்து. அதில் பதிவாகியிருந்த செல்போன் நம்பர் செல்வராஜுடையதாக இருநத்து. நான் அன்றைய தினம் எனது பிரவுசிங் சென்டருக்கு வந்தவர்களின் பெயர்கள் செல்வராஜ் மற்றும் வரதராஜ் என்று சொன்னேன். உடனே டி.எஸ்.பி மேற்படி லாட்ஜில் இருந்த சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டார். அன்றைய தினம் பாஸ்வேர்டு தெரியாததால் சிசிடிவி பதிவுகளை பார்க்க முடியவில்லை. பின்னிட்டு என்னை அழைத்துக் கொண்டு நாமக்கல் காவல் நிலையத்திற்கு சென்று விட்டனர். மறுநாள் மீண்டும் 14.08.2012 ம் தேதி காலை 9 - 10 மணிக்குள் ஓம்சக்தி லாட்ஜுக்கு டிஎஸ்பி, எஸ்.ஐ ஆகியோருடன் நானும் சென்றேன். அங்கு மேற்படி சிசிடிவி காமிராவை பொருத்திய நபர்களை வரச் சொல்லியிருந்தனர். அவர் மூலமாக சரியான பாஸ்வேர்டை போட்டு சிசிடிவி பதிவுகளை பார்த்தபோது, செல்வராஜ், வரதராஜ் மற்றும் மற்றொரு பெண் ஆகியோர் இருந்தது தெரிய வந்தது. அவர்கள்தான் எனது பிரவுசிங் சென்டருக்கு 11 ம் தேதி இரவு வந்தவர்கள் என்று டி.எஸ்.பியிடம் அடையாளம் காட்டினேன். அதை போலீசார் காப்பி செய்து கொண்டார்கள்.

7) பின்னிட்டு மீண்டும் என்னை நாமக்கல் காவல் நிலையத்திற்கு கூட்டிச் சென்றனர். என்னை காவல் நிலையத்திலேயே ஒரு அறையில் தங்கச் செய்தனர். நான் தங்கி விட்டேன். அன்று இரவு ஈரோடு போலீசார் என்னை விசாரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அன்று இரவு சுமார் 9 அல்லது 10 மணிக்கு ஈரோடு நகர காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். என்னிடம் ஈரோடு கோட்டாட்சியர், ஆய்வாளர் ஆகியோர் விசாரித்தனர். என்னை ஈரோடு காவல் நிலையத்திலிருந்து வீட்டிற்கு அனுப்பி விட்டு மறுநாள் காலை வரச் சொன்னார்கள். 15.08.2012 ம் தேதி மீண்டும் ஈரோடு நகர காவல்நிலையத்திற்கு வந்தேன். என்னிடம் வருவாய் கோட்டாட்சியர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நகர காவல் நிலைய ஆய்வாளரும் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துவிட்டு என்னை வீட்டிற்கு அனுப்பி விட்டனர். 21.08.2012 ம் தேதி ஈரோட்டிலிருந்து காவல் அதிகாரிகள் எனது நெட் சென்டருக்கு வந்தனர். எனது நெட் சென்டரிலிருந்து சாம்சங் ஹார்டுடிஸ்க் மற்றும் அ.சா.ஆ.27 நோட்டு ஆகியவற்றை கைப்பற்றினார்கள். அப்போது நாமக்கல் டி.எஸ்.பி, வி.ஏ.ஓ மற்றும் ஈரோட்டிலிருந்து வந்த போலீஸ் அதிகாரிகள் இருந்தனர். அதன் பிறகு வேறு யாரும் வரவில்லை. கைப்பற்றிய பொருட்களைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் தற்போது காட்டப்படும் சாம்சங் ஹார்டுடிஸ்க் தான் எனது நெட் சென்டரிலிருந்து கைப்பற்றப்பட்ட ஹார்டு டிஸ்க் ஆகும். அது **அ.சா.ஆ.33** ஆகும்.

8) பின்னிட்டு செல்வராஜ், வரதராஜ், சுதாகர், செந்தில் மற்றும் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்தித்தாளில் பார்த்து தெரிந்து கொண்டேன். அதன் பிறகு வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றி விட்டதால், எனக்கு கோவை சிபிசிஐடி அலுவலகத்திலிருந்து சம்மன் வழங்கப்பட்டது. நான் சென்றபோது என்னை சிபிசிஐடி போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினர். 20.09.2013 ம் தேதி என்னை ஈரோடு JM No.2 நீதிமன்றத்தில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் குவிமுச.164 ன் கீழான வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டதாகும். அது **அ.சா.ஆ.34** ஆகும். மேற்படி செல்வராஜ், வரதராஜ், செந்தில், சுதாகர் ஆகியோரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும்(எதிரிகள் இன்று ஆஜரில் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.)வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

அரசுத் தரப்பில் என்ன காரணத்திற்காக 13.08.2012 ம் தேதி இரவு நாமக்கல் நகர காவல் நிலையத்தில் தங்கினீர்கள்? என்று கேள்வி எழுப்பப்பட்டது, அதற்கு சாட்சி, அன்று இரவு 12 மணிக்கு மேல் ஆகிவிட்டதாலும், வீட்டிற்கு செல்வதற்கு போதிய பேருந்து வசதி இல்லாததாலும், மறுநாள் காலை காவல் நிலையத்திற்கு வரவேண்டி இருந்ததாலும், என்னை காவல் நிலையத்தில் தங்கச் சொன்னதாலும், தான் காவல் நிலையத்திலேயே அன்று இரவு தங்கி விட்டதாக சொல்கிறார்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு, சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**